# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### <u>இலங்கை பாராளுமன்ற தூதுக்குழுவினரின் இந்திய விஜயம்</u>

கௌரவ சபாநயாகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அவர்கள் தலைமையிலான இலங்கைப் பாராளுமன்ற தூதுக்குழுவினர் 2023 டிசம்பர் 16 ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையில் இந்தியாவுக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர். இப்பேராளர்கள் குழுவில் சுற்றாடல் அமைச்சர் கௌரவ கெஹலிய ரம்புக்வெல்ல, பல்வேறு அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 9 பாராளுமன்ற உறுப்பினர்கள், இலங்கை பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் அங்கம் வகித்திருந்தனர். புதுடில்லியில் உள்ள புதிய பாராளுமன்ற தொகுதி திறந்துவைக்கப்பட்ட பின்னர் வெளிநாட்டைச் சேர்ந்த பாராளுமன்ற தூதுக்குழுவொன்று மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவாகுமென்பது குறிப்பிடத்தக்கது.

2. இவ்விஜயத்தை மேற்கொண்டிருந்த தூதுக்குழுவினர் 2023 டிசம்பர் 18ஆம் திகதி துணை ஜனாதிபதி ஸ்ரீ ஜெக்தீப் தங்கர் அவர்களைச் சந்தித்திருந்தனர். அன்றைய தினம் லோக் சபா சபாநாயகர் ஸ்ரீ ஓம் பிர்லா அவர்கள் இப்பேராளர்களை வரவேற்றதுடன் இருதரப்பு பாராளுமன்ற பேச்சுகள் மற்றும் பரிமாற்றங்களும் இடம்பெற்றிருந்தது. தொடர்ந்து, சபாநாயகர் அவர்கள் மதியபோசன விருந்துபசாரம் ஒன்றை தாம் சார்பாக நடத்தியிருந்தார். அத்துடன், வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்ஷங்கர் அவர்களையும் இத்தூதுக்குழுவினர் பிரத்தியேகமாக சந்தித்திருந்தனர். இலங்கையிலிருந்து விஜயம் செய்த இப்பாராளுமன்ற தூதுக்குழுவானது இந்திய பாராளுமன்றின் இரு சபைகளதும் அமர்வுகள் மற்றும் நடைமுறைகளையும் பார்வையிட்டிருந்ததுடன் கட்சிபேதமின்றி பல்வேறு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டிருந்தனர்.

3. முன்னொருபோதும் இல்லாத வகையில் 2022 ஆம் ஆண்டில் இலங்கை மக்களுக்கு 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கி உதவியதற்காக சபாநாயகர் கௌரவ. மகிந்த யாப்பா அபேவர்த்தன அவர்களும் இலங்கையைச் சேர்ந்த ஏனைய பிரதிநிதிகளும் இவ்விஜயத்தின்போது இந்திய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. வர்த்தகம் மற்றும் சுற்றுலா உட்பட பல்வேறு துறைகளில் இந்தியாவுடனான ஆழமான மற்றும் நெருக்கமான ஒத்துழைப்புக்காக இலங்கையின் பாராளுமன்ற தூதுக்குழுவால் அழைப்புவிடுக்கப்பட்டிருந்தது. இதேவேளை, இரு நாடுகளுக்கும் இடையிலான நாகரீகத் தொடர்புகளை சுட்டிக்காட்டிய இந்தியத் தலைமைத்துவமானது, தொடர்புகள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் முதலீடுகள் போன்ற பல்வேறு துறைகளில் இலங்கைக்கு தொடர்ந்து உதவுவதாக மீண்டும் உறுதியளித்துள்ளது.

எதிர்காலத்தில் இரு பாராளுமன்றங்களுக்கும் இடையிலான தொடர்ச்சியான பரிமாற்றங்கள் மற்றும் ஈடுபாட்டுக்கும் இருதரப்பினரும் அழைப்பு விடுத்தனர்.

4. இதேவேளை இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான பௌத்த உறவுகளை வலியுறுத்தும் வகையில் இத்தூதுக்குழுவினர் உலக மரபுரிமை சின்னமான அஜந்தா குகைகளை பார்வையிட்டனர். அத்துடன் அசாம் மாநிலத்துக்கான விஜயத்தின்போது அம்மாநில சட்டசபை சபாநாயகர் ஸ்ரீ பிஸ்வஜித் தைமேரி மற்றும் மாநில சட்டமன்ற உறுப்பினர்களுடன் இத்தூதுக்குழுவினர் உரையாடல்களை மேற்கொண்டிருந்தனர், மேலும், அண்மையில் திறக்கப்பட்ட சட்டசபை வளாகத்தையும் அவர்கள் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

5. இந்திய-இலங்கை பாராளுமன்ற நட்புறவு சங்கம் 2021 நவம்பரில் இலங்கை பாராளுமன்றத்தில் மீள ஸ்தாபிக்கப்பட்டபோது 100க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டமை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூரத்தக்கது. அதேபோல, ஆகஸ்ட் 2023 இல் வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்கள் வீடியோ மூலமாக நிகழ்த்திய உரை, 2023 டிசம்பரில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக நடத்தபட்ட விருந்துபசாரம் ஆகியவற்றிலும் கணிசமான எண்ணிக்கையிலானோர் பங்கேற்றிருந்தனர். இந்த தூதுக்குழுவினரின் விஜயமும், மேற்கூறிய நிகழ்வுகளில் கணிசமான எண்ணிக்கையிலானோர் பங்கேற்றமையும் இரு நாட்டு மக்களையும் பிணைக்கும் ஜனநாயக விழுமியங்கள் மற்றும் மரபுகளின் அடையாளங்களாகும்.

***

**கொழும்பு**
**22 டிசம்பர் 2023**